பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 07 2024 **WEDNESDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற கூட்டத்தொடர் இன்று நிறைவடைந்தது.

2. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் நடந்து கொண்ட விதம் ஏற்புடையதல்ல என்று மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

3. அமைச்சரவை குழுக்களை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

4. இந்தியா – மங்கோலியா இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி இன்று தொடங்கியது.

5. ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>><<<<<

நாடாளுமன்ற கூட்டத்தொடர் இன்று நிறைவடைந்தது.

மக்களவை நேற்று ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், மாநிலங்களவையும் இன்று மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

முன்னதாக, குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி பேசினார்.

மகளிர் மேம்பாட்டிற்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சியில், அடுத்த ஐந்தாண்டுகள் மிகவும் முக்கியமானது என்றும் அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏழை மக்கள், விவசாயிகள், இளையோர் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்கான திட்டங்களுக்கு உத்வேகம் அளிக்கப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். பிரதமர் உரையாற்றிக் கொண்டிருந்த போது, எதிர்க்கட்சிகள் வெளிநடப்பில் ஈடுபட்டனர். தொடர்ந்து பேசிய திரு. நரேந்திர மோடி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு தாம் அளிக்கவுள்ள பதிலைக்கூட கேட்க விரும்பாமல் அவர்கள் வெளிநடப்பில் ஈடுபட்டதாக குறை கூறினார்.

>>>><<<<<

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றும் போது, எதிர்க்கட்சிகள் நடந்து கொண்ட விதம் வேதனை அளிப்பதாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் உரையை முடிக்கும் வரை எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டது ஏற்புடையதல்ல என்றார்.

நாடாளுமன்ற நெறிமுறைகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நடந்து கொண்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நீட் முறைகேடு புகார் தொடர்பான பிரச்சினையில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

>>>><<<<<

அமைச்சரவை குழுக்களை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

இதன்படி, நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அரசியல், நாடாளுமன்றம் மற்றும், பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுக்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பிற்கான அமைச்சரவை குழுவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

>>>><<<<<

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட பாதுகாப்புத் தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கென தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியத்தை பாதுகாப்புத்துறை ஏற்படுத்தியுள்ளது.

சிறு குறு தொழில் நிறுவனங்கள் மற்றும் தனியார் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நிதியத்தின் கீழ், 77 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

27 பாதுகாப்புத்துறை சார்ந்த தொழில்நுட்பங்கள் இதன்கீழ் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<<

ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு சூழல் குறித்து ராணுவ தலைமைத் தளபதி ஜென்ரல் **Upendra Dwivedi** இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

உள்துறை முதன்மைச் செயலர் மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

எல்லைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

>>>><<<<<

மதுபான கொள்கை முறைகேடு தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் நீதிமன்றக் காவல் வரும் 12ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தில்லி சிறப்பு நீதிமன்றம் இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இவ்வழக்கில், தில்லி முன்னாள் முதலமைச்சர் திரு. மனீஷ் சிசோடியா, **BRS** கட்சியைச் சேர்ந்த திருமதி கவிதா ஆகியோரின் நீதிமன்றக் காவலும் வரும் 25ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சிபிஐ, தமக்கு எதிராக தாக்கல் செய்துள்ள ஊழல் வழக்கில் ஜாமின் கோரி திரு. அரவிந்த் கெஜ்ரிவால், தில்லி உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

>>>><<<<<

இந்தியா – மங்கோலியா இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி இன்று மேகாலயாவில் தொடங்கியது.

வரும் 16ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்தப் பயிற்சியில், இந்தியாவின் சார்பில் 45 பேரும், மங்கோலியா சார்பில் 150 பேரும் பங்கேற்றுள்ளனர்.

>>>><<<<<

மத்தியப்பிரதேச சட்டப்பேரவையில் நடப்பு நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை இன்று தாக்கல் செய்யப்பட்டது.

பிஜேபி தலைமையிலான அரசு மீண்டும் பொறுப்பேற்றவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையில், புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை.

அனைத்து பிரிவினரும் பயன்பெறும் வகையிலான அம்சங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ளதாக அம்மாநில நிதியமைச்சர் திரு. **Jagdish Devda** பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கல்வி மற்றும் சுகாதார துறையின் வளர்ச்சிக்கும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் இந்த நிதிநிலை அறிக்கையில் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

சாலை மேம்பாட்டிற்காக 900 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் திரு. **Jagdish Devda** கூறினார்.

**>>>><<<<<**

**LTTE-**ஐ சட்டவிரோத அமைப்பாக அறிவிப்பதற்கு போதுமான காரணம் உள்ளதா என்பது குறித்து ஆராய்வதற்காக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட நடுவர் மன்றம் இதுதொடர்பான கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமான காரணங்களை தில்லி உயர்நீதிமன்ற வளாகத்தில் செயல்படும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு நடுவர் மன்றத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடுவர் மன்றத்தில் வரும் 23ஆம் தேதி மாலை மணி 4.30-க்கு நேரில் ஆஜராகி கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு நடுவர் மன்றத்தின் பதிவாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**>>>><<<<<**

பருவமழை காரணமாக தேசிய நெடுஞ்சாலைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளோடு இணைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நிலச்சரிவினால் பாதிக்கப்படும் பகுதிகளில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென சிறப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பயணிகளுக்கு உதவும் வகையில், கைபேசி செயலி ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் கூறியுள்ளது.

>>>><<<<<

மணிப்பூரில் பெய்து வரும் கனமழை காரணமாக பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் கனமழை பெய்து வருவதாகவும், இது மேலும் இரு தினங்களுக்கு நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இம்பால் நகரின் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதாகவும், அம்மாநிலத்தில் இன்று பொது விடுமுறை அறிவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

பள்ளிகளுக்கு நாளையும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் மணிப்பூர் அரசு கூறியுள்ளது.

>>>><<<<<

ஜப்பானில் புதிய பண நோட்டுக்களை அந்நாட்டு அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

பத்தாயிரம் **Yen,** ஐயாயிரம் **Yen,** ஆயிரம் **Yen** என்ற மதிப்பில் இந்த வங்கி நோட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கள்ளநோட்டு புழக்கத்தை தடுப்பதற்கான பாதுகாப்பு அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளதாக அந்நாட்டு நிதியமைச்சர் திரு. **Shunichi Suzuki** செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

>>>><<<<<

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

சீனாவின் **Chong Quing**–ல் நடைபெற்று வரும் ஆடவர் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது. மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Suhana Saini** பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<<

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் 100 மீட்டர் தடை ஓட்டத்தில் பங்கேற்க இந்தியாவின் **Jyothi Yarraji** தகுதி பெற்றுள்ளார்.

உலக தர வரிசைப் பட்டியலில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அவர் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். 100 மீட்டர் தடைஓட்டத்தில் இந்தியாவின் சார்பில் பங்கேற்கும் முதல் பெண் என்ற பெருமையை **Jyothi Yarraji** பெற்றுள்ளார்.

**>>>><<<<<**

உலக டிவென்டி டிவென்டி கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணி, பார்படாஸிலிருந்து இன்று புறப்பட்டது. நாளை அதிகாலை புதுதில்லி வரும் இந்திய அணியினர், பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்திக்கவுள்ளனர். மாலை மும்பை செல்லும் இந்திய அணிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

விமான நிலையத்திலிருந்து இந்திய அணி வீரர்கள் திறந்தவெளிப் பேருந்தில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

**>>>><<<<<**

டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் ஆல்ரவுண்டர் பிரிவில் இந்தியாவின் **Hardik Pandya** முதலிடத்தை பிடித்துள்ளார்.

**>>>><<<<<**

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Negi** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். இந்தோனேஷியாவின் **Yogya Karta**-ல் நடைபெற்று இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 19-21, 21-7 என்ற செட்கணக்கில் சீன தைபே-யின் **Hung Bing Su**-வை வென்றார். மகளிர் ஒற்றையர் பிரிவில் **Navya Kanderi, Adarshini**-யும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Ronak Chouhan, Pranam Ram,Pranay Shettigar** ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர். கலப்பு இரட்டையர் பிரிவில் **Vansh Dev - Shrivani** இணையும், **Bhargav Ram – Vennala** இணையும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**>>>><<<<<**

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது. சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா இன்று ஹாங்காங்கை வென்றது.

**>>>>END<<<<<**